தஞ்சை சரஸ்வதி மகால் வெளியீடு எண். 216.

# நாசிகேது புராணம்

THE THANJAVUR MAHARAJA SERFOJI'S SARASVATHI MAHAL LIBRARY
THANJAVUR



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்
சரசுவதி மகால் நூல்நிலையம்

1985 ] [விலை ரூ. 2—50

T-7790

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு எண். 216

# நாசிகேது புராணம்

cl. 36393
1985

பதிப்பாசிரியர் :

திரு. **ம. சீராளன்,** பி.ஏ., சி.லிப்.எஸ்சி.,
நூலகர் நிலை II,
சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

THANJAVUR
4 OCT 1985



தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின்

**சரசுவதி மகால் நூல் நிலையம்**

*

1985] [விலை ரூ. 2—50

முதற்பதிப்பு : 1985

வெளியீடு :

சரசுவதி மகால் நூல் நிலையம், தஞ்சாவூர்.

பதிப்பகம்:

சரசுவதி மகால் நூல் நிலைய அச்சகம்,
தஞ்சாவூர்.

# வெளியிடுவோர் முகவுரை

தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம் பல அரிய சுவடிகளைத் தன்னகத்தே கொண்டு இலக்கிய உலகிற்கு அணியெனத் திகழ்வதுடன் ஆய்வுப் பணிக்கும் உறுதுணை யாய் விளங்குவது யாவரும் அறிந்ததே.

நம்முன்னோர்கள் நமது கலாச்சாரப் பண்பினை புராண இதிகாசங்களின் வாயிலாக எடுத்துக் காட்டியுள்ள னர். அவைகள் உணர்த்தும் அரிய கருத்துக்கள் பெருமை சான்றது. பல நீதி முறைகளையும், நுட்பமான கருத்துக் களையும் யாவரும் புரிந்து ஏற்றுக்கொள்ளும் வகையில் கதைப்போக்கில் கூறியுள்ளனர். இவ்வாறு நமது புராண இதிகாச, உபநிடதங்களில் பல கதைகள் சொல்லப்பட்டுள் ளன. நாசிகேதுபுராணம் என்னும் இக்கதை கடோப நிஷத்திலும், மகாபாரதத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டிற்கும் கதைப்போக்கில் சிறிது வேறுபாடு இருப்பி னும் முடிவு ஒன்றாகவே அமைந்துள்ளது. சமுதாய முன் னேற்றத்திற்கு உபநிடதம் போன்ற அறநூல்கள் உறு துணையானவை. ஆகவே பெரியோர்கள், அனைவரும் கற்க வேண்டியவைகள் அறநூல்களே எனக் கூறுவர்.

இந்நூல்நிலைய வாயிலாக திருச்சோற்றுத்துறை தல புராணம், கும்பகோணப்புராணம், திருப்பெருந்துறைப் புராணம், நல்லூர்ப் புராணம் போன்ற தலபுராணங்களும்

அதிவீரராமபாண்டியன் எழுதிய கூர்மபுராணமும், ஆத்திச் சூடிப்புராணம், சரபபுராணம், வினாவிடைப் புராணம், ததீசிப்புராணம் போன்ற நூல்களும் ஏற்கனவே வெளி வந்துள்ளன. அதைத்தொடர்ந்து இந்நூலும் வெளியா கின்றது.

இந்நூலுக்குத் தக்க முன்னுரை, பதிப்புரை தந்து நன் முறையில் பதிப்பித்துள்ள இந்நூல்நிலைய நூலகர் நிலை II, திரு. எம். சீராளன், பி. ஏ., சி. லிப். எஸ்சி., அவர் கட்கு எமது பாராட்டினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர பொருளுதவி புரியும் மைய அரசுக் கும் நன்றி கூடப்பாடுடையேன்.

தஞ்சாவூர்,
17—8—85.

**து. இரா. இராமசாமி,** இ.ஆ.ப.,
மாவட்டாட்சியர் மற்றும் இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

# பதிப்புரை

நாசிகேது புராணம் என்னும் இந்நூல் 1973ஆம் ஆண்டு சரசுவதி மகால் நூலகப் பருவ இதழ் வாயிலாக வெளிவந்த ஒன்றாகும். இதன் மறுபதிப்பு தற்பொழுது வெளிவருகிறது. இந்நூல் பற்றிய கதைச்சுருக்கம் முதலிய விவரங்கள் முதல் பதிப்பு முன்னுரையில் கொடுக்கப் பட்டுள்ளன.

நம்முடைய புராணங்களும் இதிகாசங்களும் நமக்குப் பலநல்ல நெறிகளைப் புகட்டுகின்றன. ஆகவேதான் இவைகள் தொன்றுதொட்டு இன்றுவரை பரவியுள்ளன. ஹிந்து தருமத்திற்குச் சான்றான நூல்களுள் முக்கியமானவை உபநிடதங்கள். உபநிடதம் என்ற சொல்லுக்குச் சிரத்தையுடன் அருகே அமர்தல் என்பது பொருள். பண்டைக் காலத்தில் ரிஷிகளின் ஆசிரமங்களில் அப்பெரியோர்களை அணுகி மாணவர்கள் சிரத்தையுடன் தத்துவ விசாரம் செய்துவந்தனர். ரிஷிகள் போதித்த உண்மைகளே உபநிடதங்கள் என்று பெயர் பெற்றன. உபநிடதங்களின் சிற்சில இடங்களில் நுண்ணிய கருத்துக்கள் வெளியிடப் பட்டிருக்கின்றன. அந்தக் கருத்துக்களை மட்டுமே உபநிடதங்கள் என்று கூறுவதும் உண்டு. உதாரணமாகப் பிருகதாரண்யம் என்ற உபநிடத்தில் முழுமுதற் பொருளாகிய ஆன்மாவை உண்மையிலுண்மை என்று கூறி இது ஆன்மாவின் உபநிடதம் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. உபநிடதம் உணர்த்தும் பேரறிவு பிறவிப் பிணியையும் அதற்கு மூலமான அறியாமையையும் ஒழிக்கிறது என்ற காரணத்தாலும் இப்பெயர் பெறும் என்று சங்கர பாஷியத்தில் கூறப்படுகிறது.

உபநிடதம் என்ற பெயருள்ள ஏறக்குறைய இருநூறு நூல்கள் இப்பொழுது இருக்கின்றன. முக்திகா என்ற உபநிடத்தில் 108 உபநிடதங்களின் பெயர்கள் கூறப் பட்டுள்ளன. ஆனால் அவற்றுள் அனேகம் பிற்காலத்தில் தோன்றியவை. மிகவும் பழமையானவையும் சங்கரர் முதலிய ஆச்சாரியர்கள் சான்றாக எடுத்துக்காட்டியுள்ள வையுமான உபநிடதங்கள் சிலவே. இவற்றுள் முக்கிய மானவை ஈச, கேன, கட, பிரச்ன, முண்டக, மாண்டூக்கிய தைத்ரீய, ஐதரேய, சாந்தோக்கிய, பிருகதாரணியக, கௌஸீதகி, மைத்ராயணீய, சுவேதாச்வதர உபநிடதங் கள்.

உபநிடதங்களில் சிலவற்றை ஔரங்கசீப்பின் தமயனும் இந்துமதப் பற்றுள்ளவருமான தாராஷிகோ சிர்-இ-அக்பர் அதாவது (பெருரகஸ்யம்) என்ற பெயரில் பாரசீக மொழியில் மொழி பெயர்த்தார். இதிலிருந்து அங்க்வேஷில் டூ பெர்ரான் (Anquetil Du Perron) என்பவரால் செய்யப்பட்ட ஐரோப்பிய மொழி பெயர்ப் பின் மூலமே உபநிடதம் மேனாட்டில் பரவியது. ஷோப்பன் ஹார் என்ற ஜெர்மன் அறிஞர் வாழ்க்கையிலும் மரண காலத்திலும் தமக்கு இந்திய உபநிடதங்களே ஆறுதல் அளித்தன என்று கூறினார். இன்று உபநிடதங்கள் போதிக்கும் வேதாந்தம் உலகெங்கும் பரவியிருக்கிறது.

வாழ்வை நல்வழியில் நடத்தி மனதைச் சுத்தமாக வைத்துக்கொண்டு, மெய்ப்பொருளில் உண்மைப்பற்றுடன் படிப்பவர்களுக்கு இந்த உபநிடதங்களைப்போல உதவக் கூடிய நூல்கள் உலகத்தில் வேறில்லை. ஆனால் தற்காலப் பள்ளிக்கூட படிப்புப் பெற்றவர்கள் நம்முடைய அற நூல்களைப் படிப்பதேயில்லை. படிக்க விரும்புவதுமில்லை.

நாசிகேதுவின் கதை மகாபாரதத்திலும் கடோப நிஷத்திலும் கூறப்படுகிறது. இக்கதையின் மூலம் மிக நுட்பமான கருத்து தெளிவாகிறது. இக்கதையில்

நாசிகேது தன் தகப்பனார் நடத்திய யாகத்தில் யமனுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்டு, எமலோகம் சென்று அங்கே தருமதேவதையிடம் ஆத்ம ரகசிய உபதேசம் யாசித்த விவரம் கூறப்படுகிறது. நாசிகேதுவின் தீரத்தைக்கண்டு யமன் மகிழ்ந்து நீண்ட ஆயுளும் எல்லா உலக போகங்களும் தருவதாகச் சொன்னபோதிலும் ஒப்புக்கொள்ளாமல் உபதேசமே வேண்டுமென்று பிடிவாதமாக வணங்கி நின்றான். விஷயத்துக்குத் தக்க ஆச்சாரியனும், ஆச்சாரியனுக்குத் தக்க சீடனும் இவ்வாறு வாய்த்தது பொருத்தமே.

எமலோகத்தில் தருமதேவதை உபதேசித்ததாகக் கடோபநிஷத்தில் அமைந்திருக்கும் தோற்றுவாயும் மிகவும் பொருத்தமானதே. இந்த உபநிடத்தின் விஷயம், ஆத்மா எவ்வாறு உடலுக்குச் சம்மந்தப்பட்டிருக்கிறது என்பது. உடலினின்று உயிரைப் பிரித்து எடுத்தேகும் யமதேவனைக் காட்டிலும் வேறு யார் ஆத்ம ரகசியத்தை அறிந்து உபதேசிக்க முடியும்? ஆகையால் யமனையே ஆச்சாரியனாக அமைத்து இந்த உபநிடத்தில் சொல்லப்பட்டுள்ளது.

இன்னொரு விதமாகப் பார்த்தாலும் ஆத்ம தரிசனம் பெறுவது யாருக்கு முடியும்? புலன்களால் அடையும் போகங்களைப் பொருட்படுத்தாத நாசிகேதனைப் போன்ற தீரனுக்குத்தான் முடியும். மாசற்ற மனதை எடுத்துக் காட்டச் சீடன் இவனைப் போன்றுதான் அமையவேண்டும்.

ஆசைகளை யொழித்துப் பற்றுகளைக் களைந்தாலொழிய அறிவினாலும், வேதம் ஓதுதலினாலும் புலவர்களிடம் ஆராய்ச்சிகள் கேட்டதனாலும் மயக்கம் தீராது. ஆத்ம தரிசனம் அடைய முடியாது. தகப்பனார் செய்த யாகத்தைப் பூரணமாக்கிப் பசுக்களுடன் தன்னையும் ஒரு

தானமாகக் கொடுக்கச்சொல்லி யமலோகம் சென்று அங்கே யமன் தருவதாகச் சொன்ன மற்ற வரங்களை வேண்டாமென்று சொன்ன வரலாறு பக்குவமடைந்தவன் அடையக்கூடிய ஞானோபதேசத்திற்கு மிகச்சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

அடுத்து நாசிகேது புராணம் என்னும் நூல் வரலாறு பற்றி ஆராயப்புகின் கி. பி. 15ஆம் நூற்றாண்டில் நாசிகேது புராணக் கதையைப் பிரபந்தமாக நாசிகேது உபாக்கியானம் என்ற பெயரில் துங்குப்பள்ளி துக்கண்ணு என்பவர் எழுதியுள்ளதாகத் தெரிகிறது. பின்னர் சந்தலூறு சிக்கையா என்பவரும் இக்கதையை பத்திய காவியமாக எழுதியுள்ளார். தஞ்சையிலும் மராட்டிய மன்னர் காலத்தில் வாழ்ந்த ஜெட்டி (மல்லர்) வகுப்பைச் சார்ந்த திம்மா ஜெட்டி என்பவர் திருமலை நாதக்கவியை அழைத்து நாசிகேது புராணத்தைத் தெலுங்கு மொழியில் எழுதிக் கொடுக்குமாறு கூறியதாகவும் அறியமுடிகிறது. இவை யாவும் கடோ உபநிஷத் கதையைத் தழுவியதாகும். இவ்விவரங்களைச் சென்னை பல்கலைக் கழகத்தாரால் 1978 ஆம் ஆண்டு டாக்டர் N. வெங்கடட்ட ராவ் அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட "தென்னிந்திய தெலுங்கு இலக்கியங்கள்" என்ற தெலுங்கு நூல் தெரிவிக்கின்றது. இந் நூலகத்திலுள்ள எம். 314/டி. 627 என்ற எண்ணுள்ள தமிழ்ச்சுவடியின் நூலாசிரியர் பெயர் தெரியவில்லை. சுவடி பிலவங்க வருடம் 9-ம் தேதி எழுதி முடிந்தது என்ற குறிப்புள்ளது. சுவடியின் நிலை முதலியவற்றைக் கருத்திற் கொண்டு பார்க்குமிடத்து இச்சுவடியும் தஞ்சை மராட்டியர் காலத்தில் வாழ்ந்த புலவர் பெருமக்களால் எழுதியிருக்கக் கூடுமென்று யூகிக்கலாம்.

இந்நூலின் மறுபதிப்பு வெளிவர அனுமதி வழங்கி அணிந்துரை நல்கிய இந்நூலக இயக்குநரும் தஞ்சை

மாவட்ட ஆட்சியருமான உயர்திரு T. R. ராமசாமி, I. A. S. அவர்களுக்கு நன்றி கடப்பாடுடையேன். இந்நூல் வெளிவர ஒத்துழைப்புத் தந்த நூலக நிர்வாக அதிகாரி பொறுப்பிலுள்ள திரு A. பஞ்சநாதன், M. A., B. Lib. Sc., அவர்கட்கும், நன்முறையில் அச்சிட்டுத்தந்த நூல்நிலைய அச்சகத்தாருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழார்ந்த பெரியோர்கள் முன்வைக்கும் இச்சிறு நூலின் குற்றங்களைந்து குணம்நாடி ஏற்க வேண்டுகிறேன். இத்தகைய நற்பணிக்கண் உய்த்தருளும் தமிழ் அன்னை யின் அடியிணைகளைப் போற்றுகிறேன். அன்னை அருள் புரிவாளாக.

தஞ்சாவூர்,
28—7—85.

ம. சீராளன்.

# AN APPEAL

Manuscripts on Palm Leaf or Paper of the ancient works of the wise-men of the past, are the great treasures, solely inherited by the Nation, and it is the moral obligation of persons who possess them to preserve them safely for the future generations of mankind.

Probably you have some of these in your possession or you know friends or neighbours who possess them. You can make a great contribution to the cause of the preservation not only of our National Culture but also of the Culture of Humanity as a whole by arranging to present such manuscripts to the famous T. M. S. S. M. Library, Thanjavur.

The manuscripts so presented will be accepted and acknowleged with pleasure and gratitude by the authorities of the Library, preserved with meticulous care and made available to successive generations of readers and scholars for study and research. The hitherto unpublished works found among them, will be printed and published in due course, as facilities occur, with the expression of the Library's gratitude for your gift.

The great Scholar-King of Tanjore, Rajah Serfoji, has attained immortal fame by dedicating enormous time and wealth to the expansion and firm establishment of this world-famous 'Sarasvati Mahal Library'. It is open to you to share the honour of Serfoji, in your own measure. by contributing your manuscripts to the great institution built by him.

This great Honour is beckoning to you to accept it, Will you hasten to take it up?. The Library waits for your answer.

Collector & Director,
T.M.S.S.M. Library, Thanjavur.

# முன்னுரை.

தமிழ் இலக்கியங்களில் தொன்றுதொட்டு பெருமை சான்றது புராணங்களும் இதிகாசங்களுமாகும். வேத காலத்திலிருந்து புராணங்கள் கதைகளாக இருந்தனவே யன்றி நூல்களாக இருக்கவில்லை. அக்காலத்தில் புராண நூல்கள் சிறந்த இலக்கியங்களாக கருதப்பட்டிருக்கின்றன. எது தொன்றுதொட்டு இன்றுவரை பரவி இருக்கின்றதோ அதுவே புராணம் என்று வாயு புராணம் கூறுகிறது. புராணம் என்னும் சொல் உபநிஷதங்களிலும் சாஸ்திரங் களிலும் காணப்படுகிறது. மகாபாரதத்திலும் புராணங்க ளின் பெயர்கள் கூறப்பட்டிருக்கின்றன. அரசகுமாரர்களும் கற்கவேண்டிய நூல்களுள் புராணமும் ஒன்று என்று கி. பி. நான்காம் நூற்றுண்டில் கௌடில்யர் தமது அர்த்த சாஸ்திரத்தில் கூறுகிறார்.

இச்சிறு நூலான நாசிகேது புராணம் நாசிகேது என்பவனுடைய வாழ்க்கை நிகழ்ச்சி ஒன்றை நமக்குக் கூறி அதன் மூலம் உலகில் உள்ள ஒவ்வொரு உயிரும் அறியத் தக்க அரிய செய்திகளைத் தொகுத்துக் கூறுகிறது. உயிர்கள் உய்ய வழி வகை சொல்கிறது. இந்நூலை நுகருமுன் நூல் பற்றிய பிற விபரங்களையும் அறிவது இன்றியமையாததா கும். இக்கதை மகாபாரதத்திலும் கட உபநிஷத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இரண்டிற்கும் சிறிது கதைப் போக்கில் வேறுபாடிருப்பினும் முடிவு ஒன்றாகவே அமைந் துள்ளது. முடிந்த முடிபான கருத்தைத்திரட்டி இந்

நூலாக்கியிருக்கிறார் ஆசிரியர். மகாபாரதக் கதைப் போக்கைத் தழுவியுள்ள இந்நூலின் கதையை முதலில் நோக்குவோம்.

தீவ்வியாங்கன் என்னும் மகரிஷி நீண்ட காலமாக வேதாகம விதிப்படி சிவார்ச்சனை செய்து வந்தார். அவருக்கு நாசிகேது என்னும் மகனொருவன் இருந்தான். ஒருநாள் தந்தை மகனை நோக்கி காலத்தே சென்று பூசைக்குப் பூ கொண்டுவரப் பணித்தார். நாசிகேது மற்ற ரிஷி குமாரர்களுடன் விளையாடி காலங்கடந்து புஷ்ப மஞ்சனத்தைப் பிதாவிடம் சேர்ப்பித்தான். இச்செயல்கண்டு, இதுவரை காலந்தப்பாமல் பூசை செய்துவந்த ரிஷி கோபித்து, மகன் நாசிகேதுவுக்குச் சாபமிட்டார். அதாவது நீ எமராசன் அறியாமல் எமலோகம் புகுவாய் என்று சாபமிட நாசிகேதுவும் அச்சாபத்தை வரவேற்று எமராசனைக் காணத்தயாராகினன். கோபத்தால் சபித்தபின் நிலை உணர்ந்த தந்தை மீண்டும் " நீ எமலோகம் சென்று நிகழ் கால சம்பவங்களை அறிந்து உன் கூட்டில் புகுந்து பிராணனுடனெழுந்திருப்பாய்" என்று சாப விமோச்சனம் கொடுக்கிறார். நாசிகேது எமலோகம் சென்று எமனைச் சந்திக்கிறன். தந்தையிட்ட சாபத்தையும் கூறுகிறன். எமராசன் நாசிகேது எமலோகம் வரவேண்டிய காலம் இது இல்லை என்று மீண்டும் உன் கூடழியாமல் புகுவாயென்று அருளிச் செய்கிறன். நாசிகேது தான் இங்கு வந்ததால் இங்குள்ள விசேடங்களை அங்குள்ளார் கேட்டால் சொல்லும்படி பாவ துரோகங்களைச் செய்தவர்கள் அனுபவிக்கும் வேதனைகளையும் அறிவிக்க வேண்டுமென்று கேட்க தன்மராசனும் சித்திரபுத்திரனை அழைத்துச் சொர்க்கமும் நரகமும் காட்டும்படி கூறுகிறன். சித்திர புத்திரன் நாசிகேதுவை ஒரு கிங்கிலியன் பின்னே அனுப்பிவித்து சொர்க்கமும்

நரகமும் காட்டிப் பாவ துரோகங்கள் செய்தவர்களையும் அறிவிக்கும்படி கூறுகிறான். இவற்றை நேரில் பார்த்தபின் நாசிகேதுவும் சாபத்தின்படி பூலோகம் வந்து கூடழிவது முன்னே தன் கூட்டில் புகுந்து தான் அங்கு கண்டவற்றை இங்குள்ளார் அறியுமாறு கூறுகிறான்.

இச்சிறுநூலில் எமலோக வருணனைகள் மிகவும் சிறப்பாகப் பேசப்படுகிறது. இது நான்கு வாசல்களுடையது. ஒவ்வொரு வாசல் புகுவாரின் சிறப்பு தனித் தனியாக எடுத்துரைக்கப்படுகிறது. சித்திரவதைப்படுகிறவர்களும், அவர்கள் செய்த பாவங்களும் கூறப்படுகிறது. மற்றும் ஏழு நரகங்களும், அதன்கண் காணப்படும் விபரீதங்களும் வேதனைகளும் விரித்துரைக்கப்படுகிறது.

அடுத்து உபநிஷத்தில் கூறப்படும் இப்புராணக் கதையைக் காண்போம். வாஜஸ்ரவஸ் என்னும் மகரிஷி பல யாகங்களை செய்து வந்தார். அவர் செய்த யாகங்களுள் விஸ்வஜித் என்பது சிறப்புமிக்கது. இந்த யாகம் செய்யும் போது தனக்கென்று ஒரு பொருளையும் வைத்துக் கொள்ளாமல் எல்லாவற்றையும் தானம் கொடுத்துவிடவேண்டும். தன்னிடமுள்ள நொண்டி, வற்றிப்போன பசுக்கள் முதலிய எல்லாவற்றையும் கொடுத்துவிட்டார்.

இவருக்கு நாசிகேது என்னும் மகன் ஒருவன் இருந்தான். அவன் மிகவும் துடிப்பான இளைஞன். தன் தந்தையிடம் சென்று தன்னை யாருக்குக் கொடுக்கப்போகிறீர்கள்; யாருக்குக்கொடுக்கப்போகிறீர்கள்; என்று தன்னை திரும்பத் திரும்பக்கேட்டான். இவனுடைய துடிக்குத்தனத்தை சகியாத மகரிஷி "உன்னை எமனுக்கு ஈந்தேன் போ" என்று

கூறி மீண்டு தொந்தரவு செய்யாதே என்று கூறிவிடுகிறார். தன் தந்தை கோபமாகக் கூறிவிட்டார் என்பதை உணர்ந்த நாசிகேதுவும் எமலோகம் செல்கிறான். ஆனால் நாசிகேது சென்ற வேளையில் எமராசன் வீட்டில் இல்லை. இப் பிராமணச்சிறுவன் வீட்டு வாயிலில் அன்ன ஆகாரமின்றி மூன்று நாட்கள் காத்துக்கிடக்கிறான். வெளியூர் சென்று மீண்ட எமராசன் வீட்டு வாயிலில் பசியோடு காத்துக்கிடக்கும் பிராமணச் சிறுவனை நோக்கி நீ யாரென்றும், வந்த காரணம் என்னவென்றும் வினவுகிறான். தந்தையின் சாபத்தால் எமலோகம் வந்து தங்களைக் காண மூன்று நாட்களாகக் காத்திருக்கிறேன் என்று கூறுகிறான் நாசிகேது. பிராமணச் சிறுவனைப் பசியோடு வீட்டுவாசலில் காக்க வைத்திருப்பது நல்லதல்ல என்பதை அறிந்த எமராசன் அவனை உபசரித்து மூன்று நாட்கள் பட்டினியாய்க் காக்க வைத்தமைக்காக மூன்று வரங்கள் தருவதாக வாக்களித்து வரங்களை கேட்கப் பணிக்கிறான்.

நாசிகேது முதல் வரமாகத் தன் தந்தையின் கோபம் தணியவேண்டுமென்று கேட்கிறான். எமராசனும் உன் தந்தையின் கோபந் தணிந்து நீ மீண்டும் போகும்போது இன்முகங்கொண்டு வரவேற்பார் என்று வரமளிக்கிறான்.

தேவலோகத்தைப்பற்றி மிகவும் சிறப்பாக கூறுகிறீர்கள். அதைப்பற்றியும் யாகங்கள் பற்றியும் அறிந்துகொள்ள மிகவும் ஆசைப்படுகிறேன். அதற்கு வேண்டிய அறிவை எனக்கு வழங்குங்கள் என்று இரண்டாம் வரம் கேட்கிறான். எமராசனும் மெச்சி சில யாகங்கள் பற்றிய முழு உண்மையையும் விளக்குகிறான். அதன் பயனாக உலகிற்கு சில யாகங்களும் இவனால் அறிவிக்கப்படும், அந்த யாகத் தீயும் நாசி

கேதுவின் பெயர் பெறும் என்று இரண்டாம் வரமளித்து அடுத்த வரம் கேட்கப் பணிக்கிறான்.

மூன்றாம் வரமாக நாசிகேது கேட்டதாவது, மனிதன் இறந்தும் பின் உயிர் வாழ்கிறான் என்று சிலர் சொல்கிறார்கள். மற்றுஞ்சிலர் இல்லை என்கின்றனர். இது ஒரு நீண்ட காலப் பிரச்னை. அதைப்பற்றி சரியான உண்மையை எனக்கு உணர்த்த வேண்டுமென்கிறான். இப்பெரிய கேள்வியை இச்சிறுவன் கேட்டவுடன் எமராசன் மிகவும் அதிர்ச்சியுறுகிறான். இப்பெரிய சோதனையிலிருந்து தப்ப நாசிகேதுவை வேறு கேள்வி கேட்கச் சொல்கிறான். ஆனால் நாசிகேதுவோ சிறிதும் மாறுவதாக இல்லை. எமராசன் மிகவும் மன்றாடிக் கேட்கிறான். ஆனால் நாசிகேது உடும்புப் பிடியாக தங்களைத் தவிர வேறு ஒருவரும் இக்கேள்விக்குச் சரியான விடையளிக்க முடியாது. ஆகவே தாங்கள் தான் விளக்கவேண்டும் என்கிறான். மீண்டும் எமராசன் பல பரிசுப் பொருள்கள் அளிப்பதாகக் கூறி இளைஞனை வேறு பக்கம் திசை திருப்ப முயல்கிறான், வேறு வரங் கேட்டால் நாசிகேது பரம்பரையினருக்கு ஒளிமயமான நூறாண்டு நல்வாழ்வு கொடுப்பதாகவும், எண்ணிறந்த யானை, குதிரை, பொன் முதலியன தருவதாகவும், நிறைய நிலமும் அதில் விரும்பிய காலம் வசிக்கவும், பூவுலகில் விரும்பிய வண்ணம் ஆட்சிபுரியவும், அதற்கு வேண்டிய வன்மையும், எல்லாச் செல்வமும் தருவதாகவும் கூறுகிறான். மேலும் நீ மனதில் எதையும் ஒளிக்காமல் வேண்டுவன எதுவாகிலும் கேட்பாயாக. நீ நேரில் காணும் இந்த அழகிய வனிதையர் தேரில் இசைக்கருவிகளுடன் இங்குமங்கும் சென்றுகொண்டிருப்பவர் இவர்களை மனிதரால் பார்க்க முடியாது. நான் ஆணையிட்டால் அவர்கள் உனக்கு ஏவல்

செய்யக் காத்திருக்கிறார்கள். கொஞ்சம் யோசித்துச் சொல் என்கிறான். கடவுள் பெயரால் உன்னை வேண்டுகிறேன். உயிரைப்பற்றியோ இறப்பைப்பற்றியோ எதுவும் கேட்கவேண்டாம் என பலவாறாக மன்றாடுகிறான்.

எமராசன் கூறிய சொற்கள் நாசிகேதுவை மிகவும் வியப்படுத்துவதாக இருந்தன. ஆனால் இவற்றால் நாசிகேது சிறிதும் மனம்மாறாமல் தாங்கள்தான் எல்லாவற்றையும் அழிக்கின்றவர்; தாங்கள் தருவதாகச் சொன்ன யானை குதிரை மற்ற எல்லாப்பொருள்களும் ஒருநாள் அழியக்கூடியது. எனக்கு அவை ஒன்றும் வேண்டாம். கடவுளருக்கும் சந்தேசமாக உள்ள இறப்புக்குப் பின் உயிர் என்ற பிரச்னையை விளக்குங்கள். மற்ற எந்த வரமும் வேண்டாம் என்று கூறிவிட்டான்.

எமராசன் நாசிகேதுவின் உயர்ந்த உள்ளத்தைப் பாராட்டி அவன் கேட்ட வரத்தை அளிக்க முன் வருகிறேன். மனித வாழ்வில் நல்ல நெறி, தீயவழி என்ற இருபாதைகள் திறந்துவிடப்பட்டுள்ளன. நல்நெறியைச் சார்வோர் என்றும் அழியா நிலையைப் பெறுவர். போகத்தையே எண்ணிக்கொண்டிருப்பவர்கள் மீண்டும் மீண்டும் பாசவலையில் சிக்கி துன்புற வேண்டிய நிலையை அடைகின்றனர். ஆகவே மனிதர்கள் வாழ்வில் நல்ல காரியங்களைச் செய்து பயனடையவேண்டும். அழியும் தன்மையுள்ள ஆசையைப் பெரிதாக எண்ணி அல்லும் பகலும் உழல்வோருக்கு எம லோகத்திலும் தொல்லையே கிட்டும். இத்தகு தொல்லை அனுபவிக்கும் மாந்தரை நேரடியாகப் பார்த்து வருமாறு நாசிகேது கண்ட காட்சிகள் தான் ' நாசிகேது புராணம் ' என்று பெயர் பெற்றுள்ளது.

புராணம் என்பது கட்டுக்கதைகள் நிறைந்ததென்பர். இருப்பினும் மக்களை நல்வழிப்படுத்த சில எடுத்துக்காட்டுகளும் ஒப்புமைகளும் அவசியமாகிறது. பாவபுண்ணியம் என்பதையெல்லாம் யார்கண்டார்கள், ஏன் நல்லன செய்லும் அல்லன ஒழிதலும் வேண்டும் என்ற இதுபோன்ற கேள்விக்களுக்கெல்லாம் சரியான விடை கூற வேண்டுமேயானல் இப்புராணங்களால்தான் இயலும். இந்நூல் புண்ணிய பாவங்கள் இன்னவையென்றும், அவற்றுள் பாவஞ்செய்தவர் யமலோகத்தில் இன்னென்ன தண்டனைப் பெறுவர் என்றும், யமகிங்கிலியர்கள் நாசிகேதுக்குணர்த்தியதாகக் கூறுகிறது.

மேலும் வசன நடையில் அமைந்த இந்நூலைச் செய்தவர் இன்னாரென்று தெரியவில்லை. சுவடியைப்படியெடுத்தவர் பெயரும் குறிக்கப்படவில்லை. சுவடி சிதைந்தும், முறிந்தும் பூச்சியரித்துமுள்ளது. சுவடியைப் படியெடுத்த ஆண்டு பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது. அதாவது 'பிலவங்கஹு மீ 9உ நாசிகேது புராணம் எழுதி முடிந்தது' என்றுள்ளது.

இச்சிறு நூலைத் தமிழ் அன்னையின் பாதத்தில் சரசுவதி மகால் வெளியீடாக அணிவித்துப் பெருமையுறுகிறோம். அன்னை ஏற்று அருள்புரிவாளாக.

தஞ்சாவூர்,
25—11—73.

ம. சீராளன்.

# வேண்டுகோள்

கருணையுள்ளங்கொண்ட நம் முன்னோர்கள், அரிய பெரிய இலக்கியங்களையும், பிறவற்றையும், பனையோலைகளில் எழுதிச் சுவடிகளாக நமக்குத் தந்தனர். அவைகள், பல்வேறு இடங்களில் உள்ளன. சுவடிகள் பழுதடைவதற்குமுன் எம்மிடம் அன்பளிப்பாகக் கொடுத்துதவினால், அவைகள் மக்களுக்குப் பயன்படும்.

எம்மிடம் கொடுப்பதன் மூலம், சுவடி தந்தவர்களும், சுவடி எழுதியோரும் அழியாப் புகழை, எமது சரசுவதி மகால் உள்ளளவும் பெறுவர். அவை பதிப்பாகி வருமாயின், சுவடி தந்தார் பெயரும் இடம் பெறுவதோடு, அப்பதிப்பில் 5 பிரதிகளும் பெறுவர்.

எனவே, "நாம் பெற்ற பேறு பெறுக இவ் வையகம்" என்ற எண்ணமுடைய நற்பண்பாளர்கள் தம்மிடமுள்ள சுவடிகளை, எமது மகாலுக்குத் தந்துதவ வேண்டுகிறோம்.

இங்ஙனம்,

T. R. **இராமசாமி**, I. A. S.,

*மாவட்ட ஆட்சியர் & இயக்குநர்,*

*சரசுவதி மகால் நூலகம்.*

*தஞ்சாவூர்,*
25—7—85.

# *நாசிகேது புராணம்

## ஆறுமுகம் துணை

ஆக்குவிக்குங் கல்விதரும் அரும்பாவ வல்வினையைப்
போக்குவிக்குஞ் செல்வம் புகுவிக்கும்—நோக்கரிய
வொண்ணுதலாள் பாக முடையான் விடையேறு
கண்ணுதலான் இக்கதைக்கோர் காப்பு.

தேவர்களில் மிக்கோரெல்லாஞ் சிறிது தன்மங்கேட்டு[1] இருந்தவிடத்து தேவதேவன், திருமறுமார்பன், பாவநாசன் பவித்திரமூர்த்தி, சக்கிரபாணி, சததண்டநாயகன் புண்டரீக புருஷோத்தமன், ஆதிநாராயணன், அனந்தனென்னும் மகாநாகமே சயனமாக யோகநித்திரை கொண்டருளுகின்ற காலத்து நாராயண சுவாமியைத் தெண்டன் பண்ணித் துதிசெய் சதுமுகன் முதலாயுள்ள தேவர்களெல்லாஞ்சூழ விருந்தபோது தேவதேவன் த்ரைலோக்கிய நாயகன் அனுக்கிரகித்துத் திருவுளமாய் எழுந்தருளியிருந்து தேவர்கள் போந்த காரணமென்ன என்று வினவியருளத் தேவர்களெல்லாம் விண்ணப்பஞ் செய்வார்.

எம்பெருமானே! கிருதயுகத்தின்கண் அசுரர் வதை நிமித்தமாக ஸ்ரீ நாராயணனாக வந்து திருவவதாரஞ்செய்து அசுரர்களைக்கொன்று தேவர்களை இரட்சித்தருளி திரேதா யுகத்தின்கண் அரக்கர் வதை நிமித்தமாக ஸ்ரீ ராமனாக வந்து திருவவதாரஞ்செய்து ராவணன் முதலாயுள்ள அரக்கரையெல்லாங்கொன்று ரிஷிகளையும் லோகங்களையும் பரிகரித்தருளி துவாபர யுகத்தின்கண் மனிதர் வதை நிமித்தமாகப் பூமிதேவியைப் பொறை[2] தீர்ப்பது பொருட்டாகவும், துட்டநிக்கிர சிட்ட பரிபாலனாகவும், பண்ண

---

*314/D. 627.

1 தன்மம்—அறம், தருமம், நீதி. 2 பொறை—சுமை.

வேண்டியருள ஸ்ரீ வாசுதேவனாக வந்து அவதரித்தருளிப் பாண்டவர்க்கும் பாங்காகிய அருச்சுனனை முன்னிட்டுக் கொண்டு தன்ம புத்திரனுக்கு படையெக்குரோணியும்[1] துரியோதரனுடனூற்றுவரும் மூன்று நூறாயிரத்தறுபதினாயிரம் படைவந்தரும், எண்ணிறந்த படைத்தலைவரும் முன்னிட்ட பதினெட்டுக் குரோணி படை மனிதரையுங் கொன்று களைந்து பூமி தேவியைப் பொறை தீர்த்து தன்ம புத்திரனுக்கு இராச்சியங் கொடுத்தருளினபடி கண்டு தேவரீர் ஸ்ரீ பாதங்களைத் தெண்டன் பண்ணி வந்தோமென்று தெண்டன் பண்ணி நின்று விண்ணப்பஞ் செய்யுமளவில் தேவர்கள் ராசமுகப்படைசூழ இரத்தின ..........ரிடபத்துச் சிங்காதனத்தின் மீதேற எழுந்தருளியிருந்து ஆதிபுருஷோத்தமனை தோத்திரங்கள் செய்து யாத்திரைக்குப் போகாமலிருந்தோம். எங்களுக்குத் தன்மமும் பாவமும் இருக்கும்படி யருளிச்செய்ய வேண்டுமென்று தேவர்கள் விண்ணப்பஞ்செய்ய, தனமும் பாவமும் கேட்டாற்குங் கேட்பித்தார்க்கும் புண்ணியமாம்; இது கேட்பீராமென்று ஆதிபுருஷோத்தமனருளிச் செய்வான் முன்னே திவ்வீயாங்கன் என்னும் மகரிஷி தன்மகன் நாசிகேதுவனை நோக்கிச் சொல்வான்.

பிள்ளாய்! எனக்கு உதயகாலத்திலே சிவ அருச்சனை பண்ணவேண்டும். அமுது வைக்கவேண்டும். போய்க் காலமே புஷ்பமும் மஞ்சனமுங் கொண்டு வருவாய் யென்ன அவனும் விடைகொண்டு போகா நிற்க, அங்கே ரிஷி குமாரர்கள் விளையாடக்கண்டு தானுமவர்களுடனே விளையாடி உதயகாலந்தப்பின பிறகு அவன் கொண்டுவந்த புஷ்ப மஞ்சனத்தையும் காட்டித் தெண்டன் பண்ணி நிற்கத் திவ்வீயாங்கனென்னும் மகரிஷி கோபித்துப் பிள்ளாய்! நீ ஒன்று மறியாதவனாய் இருந்தாய். உதய காலந்தப்பாமல் சிவார்ச்சனை பண்ணக்கண்ட வென்னை உதய காலந் தப்பிவித்து நீ இப்பொழுது புஷ்ப மஞ்சனத்தையுங் கொண்டு வந்தாய். இதுநாள் இல்லை காண்.

---

1 அக்குரோணி—பெருஞ்சேனை வகை.

கேளாய்! காலத்தின்கண் செய்யாத பூஜைகளும் காலத்தின் கண் செய்யாத சிவ பணிவிடையும் காலத்தின்கண் செய்யாத தன்மங்களும் காலத்தின்சண் நோராத நோன்புகளும் காலத்தின்கண் கல்லாத கல்விகளும் காலத்தின்கண் பெறுத பிள்ளைகளும் காலத்தின்கண் செய்யாத பயிர்களும் இத்தனையும் பயனில்லை காமென்று தன்மகன் நாசிகேதுவை உதய காலந்தப்பாமல் சிவார்ச்சனை பண்ணக்கடவேன். என்னை உதய காலந்தப்பவித்த குற்றத்துக்கு நீ எமராசனை அறியாமல் எமலோகம் புகுவாயெனச் சாபமிட்டருளினுர். நாசிகேதுவும் பிரியத்துடனே தன் கமண்டலத்து நீராலே தன் மாதா பிதாவின் சீர்பாதங்களை விளக்கி கெந்த[1] புட்ப துபங்களினுலே அர்ச்சனை செய்து அடியேனுக்கு விடை தந்தருள வென்று விண்ணப்பஞ் செய்யத் திவ்வீயாங்கனென்னும் மகரிஷி பின்னையுஞ் சந்தோஷித்துச் சொல்வான்.

நாசிகேதுவே! நீ எமலோகம் புக்கு எமதன்மராசனைக் கண்டு தெண்டன் நமஸ்காரம் பண்ணி எமதன்மராசனும் அனுக்கிரகித்து எமலோகத்து வத்தமானமும்[2] முனக்கறிவிக்க, நீயுமறிந்து உன் கூடழிவது முன்னேயுன் கூட்டில் புகுந்து பிராணனுட னெழுந்திருப்பாய் என்று விடை கொடுத்தருளி நாசிகேதுவும் விடைகொண்டுபோய் எமலோகம் புக்கு எமதன்மராசனைக்கண்டு தெண்டன் நமஸ்காரம் பண்ணி எமதன்மராசனும் அனுக்கிரகித்து நீ இங்கு வந்த காரணமேதென்று வினவியருள நாசிகேது விண்ணப்பஞ்செய்வான்.

தேவதேவனே! பிதாவாகிய திவ்வீயாங்கனென்னும் மகரிஷி ஒரு காரணத்தினுலேயே எமதன்மராசனை அறியாதே எமலோகம் புகுவாயெனச் சாபமிட்டருளினுர். அந்தச் சாபத்தினுலே விடைகொண்டு வந்தேனென்று

---

1 கெந்தம்—நறுமணம்.

2 வத்தமானம்—கருமம், சங்கதி, நிகழ்கால நிகழ்ச்சி (வத்தவானம் என்றுளது)

விண்ணப்பஞ் செய்யக்கேட்டு எமதன்மராசனும் நாசி கேதுவை நோக்கி அருளிச் செய்வான். உனக்கு எமலோகப் பிராப்தியாயிருந்ததில்லை. நீ மீண்டுபோய் உன் கூடழியா மல் புகுவாயென்று அருளிச்செய்ய நாசிகேதுவும் தேவ தேவனே நானிங்கு வந்தபடி அறியும்போது இங்குள்ள விசேஷங்கள் அங்குள்ளார் கேட்டால் அப்பொழுது சொல்ல வேணும்படி யெனக்குச் சொர்க்கமுங்காட்டிப் பாவ துரோகங்கள் செய்தவர்களையும் அறிவிக்க வேண்டு மென்று விண்ணப்பஞ்செய்யத் தன்மராசனும் அனுகிரகித் துச் சித்திரபுத்திரனை அழைத்து இவனுக்குச் சொர்க்கமும் நரகமுங் காட்டிப் பாவ துரோகங்கள் செய்தவர்களையும் அறிவித்துப்போக விடுவாயென்று அருளிச்செய்ய சித்திர புத்திரனும் அவனைக் கொண்டுபோய் ஒரு கிங்கிலியனை யழைத்து இவனுக்குச் சொர்க்கமும் நரகமுங் காட்டிப் பாவ துரோகங்கள் செய்தவர்களையும் அறிவித்துப் போக விடென்று ஒரு கிங்கிலியன் பிறகே கூட்டிவிட்டான். கிங்கிலியனும் அவனைக் கூட்டிக்கொண்டுபோய் சொர்க்க மும் நரகமுங்காட்டிப் பாவ துரோகங்களைச் செய்தவர் களையுமறிவித்துப் போகவிடுவான். அப்படியே நாசிகேது வும் எமலோகத்து வத்தமானமெல்லாம் அறிந்து பின்னே யுந்தன் கூடழிவது முன்னேவந்து தன் கூட்டில் புகுந்துப் பிராணனுடன் எழுந்திருந்து தன் மாதா பிதாவையும் மற்றுமுள்ள ரிஷிகளையும் நமஸ்கரிக்க நிற்பவர்களுஞ் சந்தோஷித்துக்கேட்டார்கள்.

நாசிகேதுவே! நீ எமலோகம் புக்கு எமராசனைக் கண்டு வந்தபடியும் அவனுனக்கு கிருபை பண்ணினபடியும் அவனுனக்கு சொர்க்கமும் நரகமுங் காட்டினபடியும் நீ எங்களுக்குரைப்பாய் என்றுகேட்க, அவர்களுக்கு நாசிகேது முரைத்தபடி ஆதி புருஷோத்தமன் தேவர்களுக்கு அருளிச் செய்வான்.

எமலோகத்துப் பிரமாணமிருக்கும் பத்து நூறுயிரம் யோசனையகலமும் நீளமும் உடையது. மாணிக்கங்களாலே

ஆழ்த்தப்பட்டது. எண்ணிறந்த கிங்கிலியர் காக்கப் பட்டது. அது நான்கு வாசலுடையது. இதில் வடவாசல் பொன்னினுலியற்றப்பட்டது. ஆதித்த கிரண மறுதலைக்கப் பட்டது. கீழ்பால் வாசல் வெள்ளியாலியற்றப்பட்டது. தென்பால் வாசல் செம்பினுலியற்றப்பட்டது. மேல்பால் வாசல் தராவினுலியற்றப்பட்டது.[1] இதில் வடபால் வாசல் புகப்பெறுவாராரோ வென்னில் திருக்கோயிலெடுத்தாருந் திருமடப்பள்ளி கட்டினுருந் திருக்கோயில்களைத் திருத்தினுருந் தேவர்களைப் ப்ரதிஷ்டை பண்ணினுரும் திருக்கோயிலுக்குப் படித்தனம் நடத்தினுரும் திருக்கோயிலுக்குத் திருவிளக்கிட்டாரும் திருக்கோயிலுக்குத் திருவடிவளஞ் செற்றினுரும் திருக்கோயிலுக்குத் திருவிளக்கிட்டாரும் திருக்கோயிலுக்குத் திருமாலை கட்டினுரும் திருக்கோயிலுக்குத் திருமஞ்சனமெடுத்தாரும் திருக்கோயிலுக்குத் தூப முண்டாக்கினுரும் மற்றுந் திருக்கோயிலுக்கு உண்டான உபயங்களை யுண்டாக்கினுரும், பெரியோர்களையும் பிராமணர்களையும் பரதேசிகளையும் ஆசிரயம்[2] பண்ணினுரும் உண்ணக் கலங்கொடுத்தாரும், உடுக்கப்புடவை கொடுத்தாரும், திருநந்தவனம் வைத்தாரும், அன்னதானம் படைத்தாரும், தன்ம பள்ளிக்கூடம் வைப்பித்தாரும், ரிஷிகள் தபோதனரை ஆசிரயம் பண்ணினுரும் பதிவிரதைகளுக்கு அறுகு கொடுத்தாரும், மறுதுயர மிட்டாரும் மன்றில் நடுவுரைத்தாரும் அருஞ்சிறை மீட்டாரும் பிறர் தாரம் பிறர் பொருளுக்காசைப் படாதாரும், பிறர் புருஷனுக்கு ஆசைபடாத புண்ணியவதிகளும், பிறர் கேடு நினையாதாரும் சந்தியில் நீருண்டாக்கினுரும், இவர்கள் வடபால் வாசல் பெறுவார்கள் என்றவாறு.

இனிக் கீழ்பால் வாசல் புக்கப் பெறுவார்களாரோ வென்னில் பூதானங்கோதனம் சொர்ணதானம் வஸ்திர தானம் கன்னியாதானம் பண்ணினுரும் திருவாசல் கட்டினுரும் தண்ணீர்ப்பந்தல் வைத்தாரும் ஏரிகுளம் வெட்டினுரும்

1 தரா—எட்டுப்பாகம் செம்பும் ஐந்து பாகம் காரீயமுங் கலந்த ஓர் உலோகம்.
2 ஆசிராம் என்றுள்ளது.

அறவைப்[1] பிணஞ்சுடு வித்தாரும் அதிதி பரதேசியை இரட்சித்தாரும் தலைக்கெண்ணெய் வார்த்தாரும், உடை வகை கொடுத்தாரும், வியாதிகளைப் பொறுப்பித்தாரும், விஷங்களைத் தீர்த்தாரும், பிச்சையிட்டுண்டாரும், பிள்ளை பால் வார்த்தாரும், தன்ம காரியங்களுக் குடன்பட்டாரும் மாதா பிதாவை இரட்சித்தாரும் வேண்டினவர்க்கு வேண்டின கொடுத்தாரும் ஸ்ரீ ஏகாதேசி, சிவராத்திரி சோமவாரம், ஆதித்தவார நோன்பும் கேதார விரதம் இப்படிப்பட்ட நோன்புகளை நோற்றாரும் அடைக்கலங்கள் காத்தாரும் இவர்கள் கீழ்பால் வாசல் புகப்பெறுவா ரென்றவாறு.

தென்பால் வாசல் புகுவராரோ வென்னில் நஞ்சிட்டுக் கொன்றாரும் நட்டாற்றில் கைவிட்டாரும் வஞ்சனையாகக் கொன்றாரும் வழிபறித்துண்டாரும் கோவை வதைத்தாரும், கொடுத்தபொருள் கொடாதாரும் கடிக்கும் நாய் வளர்த் தாரும் கடம்பர்களாய்த் திரிவாரும், கெடச்சொல்லிக் கொடுத்தாரும், குருக்களை யிகழ்ந்தாரும், பொய்சாட்சி சொன்னாரும் பொருள் வலியாற் கொன்றாரும் பெண் கொலைகள் செய்தாரும் பிராமணரைக் கொன்றாரும் இவர் கள் காணும் தென்பால் வாசல் புகுவார்களென்றவாறு.

இனி மேல்பால் வாசல் புகுவார்களாரோ வென்னில் மன்றித் துண்டாரும், வழக்கழிவுரைத்தாரும், இரை கோர்த்துத் தூண்டிலிட்டாரும், இராவிலே இல்லறஞ் சுட் டாரும், கூலியாள் தன்னைக் கொடும்பணிதான் கொண்டு கூலி கொடாமலிருந்தாரும், பதரும் மண்ணுங்கல்லுங் கலந்து அளந்தாரும், பட்டினியே வைத்தாரும், ஓதின கூலி கொடாது உபாயங்கள் சொன்னாரும், காணாது சொன்னா ருங் கேளாது சொன்னாருங் கேளாது சொன்னாரும் இவர் கள் மேல்பால் வாசல் புகுவார்களென்றவாறு.

---

1 அறவைப்பிணம்—அநாதப் பிரேதம்.

இப்பால் மற்றுஞ் சிலரை மணலை வறுத்துமேலே கொட்ட அலறி விழுவாரைக்கண்டு இவர்கள் என்ன பாவஞ் செய்தார்களென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லு வான். இவர்கள் செய்தார் செய்தன்மத்தை யழித்தாரும் குடிகேடு செய்தாரும், குருக்களை யிகழ்ந்தாரும், இரவல் வாங்கிக் கொடாதாரும், இருதாரம் வைத்து பொருதலை சாங்கம் நடந்தாரும், மரக்கால் நாழி சுருக்கினாரும், மன்றில் பறித்துண்டாரும் மென்று சொல்லக்கேட்டு வாரா நின்ற விடத்து மற்றுஞ் சிலரைக் கூரான யிருப்பு முளைகளை யறைந் ததன் மேலே போடச்சொல்லி யடிக்கையிலலறி விழுவா ரைக்கண்டு இவர்களென்ன பாவஞ்செய்தார்களோ வென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

திருக்கோயிலுக்குள்ளே செருப்புயிட்டு நடந்தாரும், குருக்களுக்கும் பிராமணர்களுக்கும் தபசிகளுக்கும் பெரி யோர்களுக்கும் புண்ணியவான்களுக்கும் புண்ணிய ஸ்திரீ களுக்கும் வழி விலகாதாரும், மாதா பிதாக்களை உதைத் தாரும், ஈசுரரை யுதைத்தாரும், பால் பசுவை யுதைத்தா ரும், திருக்கோயில் வலமாக வாராதாரும், திருநாட்கள், தீர்த்தங்கள் போகாதாரும், குருவினிட ஸ்தலத்திற்குப் போகாதாரும் இவர்கள் தானும் இந்த வாதைப்படுகிறவர் களென்று சொல்லக்கேட்டு வாரா நின்றவிடத்து மற்றுஞ் சிலரைக் கொழுவை நெருப்பெழக் காய்ச்சி நாக்கிலே தீத்தி செம்பை யுருக்கி வாயிலே வார்க்க அலறி விழுவாரைக் கண்டு இவர்கள் என்ன பாவஞ் செய்தார்களோ வென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

சிவனைத் தோத்திரம் பண்ணாதாரும், சிவனடியாரைத் தூஷணித்தாரும், ஞான வாதரையும் தபோதனர்களையும் பெரியோர்களையும் தபசிகளையும் வார்த்தை யுதாசினஞ் சொன்னாரும், புண்ணியவான்கள் புண்ணியவதிகள் பதி விரதைகள் வார்த்தை யுதாசினஞ் சொன்னாரும், யாதொரு வர் இல்லாத இடுவந்தி சொன்னாரும் குருக்களை உதாசினஞ் சொன்னாரும் கோள் சொல்லிக் குடியைக் கெடுத்தாரும்

மாதாவை உதாசினஞ் சொன்னாரும் சீவாத்துமாவைக் கொன்று தின்றாரும் திருக்கோயிலுடமையைக் களவுசெய் தாரும் எச்சில் ஒருவற்கு இட்டாரும் இவர்கள் காணும் இந்த வாதைப் படுபவர்களென்று சொல்லக்கேட்டு வாரா நின்றவிடத்து மற்றுஞ் சிலரைத் தலைகளைக் கொற்றி விளக் கெரிப்பாரைக் கண்டு சிவனை வணங்காதாரும் இவர்க ளென்ன பாவஞ்செய்தார்களோவென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

சிவனுக்குச்சாத்தாத பூவை முடித்தாரும் சிவனை வணங்காதாரும் குருபாதம் தலைமேல் கொள்ளாதாரும் இவர்கள் காணும் இந்த வாதைப்படுகிறவர்களென்று சொல்லக்கேட்டு வாரா நின்றவிடத்து மற்றுஞ் சிலரை யிருப்பு நாராசங்களை நெருப்புபோற் காய்ச்சி காதிலே மூளை யறைவாரைக்கண்டு இவர்களென்ன பாவங்கள் செய்தார் களோவென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லு வான். இவர்கள் காதிலே ஒருநாளும் உபதேசங்களைக் கேட்டவர்களல்ல. சிவபுராணங்களைக் கேட்டவர்களல்ல, சிவதோத்திரங்களைக் கேட்டவர்களல்ல, குருநிந்தை சிவ நிந்தை கேட்டவர்கள், பொல்லாவரங் கேட்டவர்கள் இவர்காணும் இந்த வாதைப்படுகிறவர்களென்று சொல்லக் கேட்டு வாரா நின்றவிடத்து மற்றுஞ் சிலரைக் கண்ணிலே இரும்பூசிகளைக்கொண்டு கிளற அலறி விழுவாரைக் கண்டு இவர்களென்ன பாவஞ்செய்தார்களோவென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

இவர்கள் ஒருநாளும் சிவனைக் குருவை நல்லோர்கள் பெரியோர்கள் குருநாதனை, பதிவிரதையைக் கண்ணில் கண்டு தெரிசித்தவர்களல்ல. பொல்லாத பாவங்களைக் கண்ணிலே பார்த்தவர்களென்று சொல்லக்கேட்டு வாரா நின்ற விடத்து மற்றுஞ் சிலரை மூக்கிலே இரும்பு நாராசங் களைக் காய்ச்சி ஏற்ற அலறி விழுவாரைக்கொண்டு இவர்கள் என்ன பாவஞ் செய்தார்களோ வென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

இவர்கள் சிவனுக்குச் சாற்றுவதற்கு முன்னே பூவை எடுத்து மோந்து பார்த்தவர்களென்று சொல்லக்கேட்டு வாராநின்றவிடத்து மற்றுஞ் சிலரை இரும்புத் தூணை நெருப்பெழக் காய்ச்சி அந்தத் தூணைத் தழுவச் சொல்லி அடிக்கையில் அலறி விழுவாரைக் கண்டு இவர்களென்ன பாவஞ் செய்தார்களோவென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

இவர்கள் தன் புருஷன் இருக்க பிறர் புருஷனைத் தழுவினும் தன் பெண்சாதி இருக்கப் பிறர் பெண்சாதியைத் தழுவினுமென்று சொல்லக்கேட்டு வாராநின்றவிடத்து மற்றுஞ் சிலரைக் கைகளிலே இரும்பு முளைகளைக் காய்ச்சி அறைந்து கைவிரலிலே பந்தமாக எரிக்க அலறி விழுவாரைக் கண்டு இவர்களென்ன பாவஞ் செய்தார்களோ வென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

இவர்கள் ஒருநாளும் சிவபணிவிடை செய்தவர்களல்ல. சிவனைக் குருவைத் தபசிகளைப் பிராமணரை நல்லோர்கள் பெரியோர்களைத் தொழாதவர்களும் தானதருமங்கள் செய்யாதவர்களும் குருவுக்கும் மகேசுரருக்கும் பெரியோர்களுக்கும் பணிவிடை செய்யாதாரும் இவர்கள் காண், இந்த வாதைப்படுகிறவர்களென்று சொல்லக்கேட்டு வாராநின்றவிடத்து மற்றுஞ்சிலரைக் குறடு காய்ச்சிப் பிடுங்கையில் அலறி விழுவாரைக் கண்டு இவர்களென்ன பாவஞ் செய்தார்களோ வென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்

இவர்கள் மாதாபிதாக்களை இலட்சியாதாரும் நஞ்சு தனை யிட்டாரும் நடுச்சொல்லாதிருந்தாரும் பசுக்களைக் கொன்றாரும் கன்றுக்குப் பால் விடாமல் கறந்தாரும் பசுக்கள் நிற்குமிடத்தில் எச்சில் நீரை யூற்றினரும் பழிகொலைகள் செய்தாருந் தன்னுடைய ஆண்டவனைப் போர்க்களத்திலே காட்டிக்கொடுத்து மீண்டோடிப் போனரும் உண்ட வீட்டிற்கு இரண்டு நினைந்தாரும் இவர்கள் காணும் இந்த

வாதைப்படுகிறவர்களென்று சொல்லக்கேட்டு வாரா நின்ற விடத்து மற்றுஞ் சிலரைப் பிரியைச் சூழ்ந்து சுடும்போது அலறுவாரும் மற்றுஞ் சிலரை அறுக்கவும் துணிக்கவும் வாச்சிகொண்டு செதுக்கச் செய்வாரும் மற்றுஞ் சிலரை கழுக்களிலே போடவும் மற்றுஞ் சிலரை ஊசித்தூண்டிலிலே போடச் செய்வாரும் மற்றுஞ் சிலரைத் தீவளர்த்து அதிலே பிடிக்க அலறி விழுவாரும், மற்றுஞ் சிலரைக் கையிலே கிட்டி கட்டி விடுவாரும் இப்படி இந்த வாதைகளினால் அலறு வாரும் விழுவாரும் அங்காலாய்ப்பாருமா யிருப்பாரைக் கண்டு இவர்கள் என்ன பாவஞ் செய்தார்களோ வென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

நாயை வளர்த்து மிருகவேட்டை ஆடினாரும் வலைத் தூண்டில் போட்டு வேட்டையாடினாரும் கண்ணிவைத்துப் பிடித்தாரும் தங்கள் மக்களும் தாங்களும் நோய்கொள்ள எங்கள் மக்களும் நாங்களும் மென்செய்தோமென்கிற ஆட்டைப் பன்றியைக் கோழியை அறுத்தாரும் அநியாயஞ் செய்தாரும் நம்பினாரைக் கொன்றாரும் சூதுகளாற் கொன்றா ரும் சூனியங்களாற் கொன்றாரும் மருந்துகளையிட்டாரும் மகாபாவஞ் செய்தாரும் பால் பசுவைக் கொன்றாரும் தன் பத்தாவைக் கொன்றாரும் இவர்கள் காணும் இந்த வாதைப் படுகிறவர்கள் என்று சொல்லக்கேட்டு வாரா நின்றவிடத்து மற்றுஞ் சிலரை ஒன்றாம் நரகம் நூறு யோசனையாழமும் அகலமுமுடையது; அதனுள்ளே ஆனைப் புழுக்களும் குதிரைப் புழுக்களும் கோமுதலைகளும் உடையது. இவற் றால் கடியுண்டு அலைமாந்து கரையேறமாட்டாமல் அலறி விழுவாரைக் கண்டு இவர்களென்ன பாவஞ் செய்தார் களோவென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லு வான்.

வழிபறித்துண்டாரும் பெண்கொலை சூழ்ந்தாரும் திரு நந்தனைமழித்தாரும் அம்பலங்களழித்தாரும் எளியா ரென்று வலிபேசி அடித்தாரும் தன்மங்களை யழித்தாரும் தயவில்லாதிருந்தாரும் இவர்கள் காணும் இந்த வாதைப்

படுகிறவர்களென்று சொல்லக்கேட்டு வாரா நின்றவிடத்து இரண்டாம் நரகம் இருநூறு யோசனை யாழமும் அகலமு முடையது; நெறுநெறு என்பதொரு சத்தமாயிருக்கும். அத னுள்ளே அலறுவாரும் விழுவாருமாயிருப்பாரைக் கண்டு இவர்களென்ன பாவஞ்செய்தார்களோ வென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

இவர்கள் வழக்கில்லா வழக்கைப் பூட்டினரும் வஞ்சனை யாகக் கொன்றாரும் காணாது சொன்னாரும் ஒருவரை யிடு வந்தியாற் சொன்னாரும் இவர்கள் காணும் இந்த வாதைப் படுவார்களென்று சொல்லக்கேட்டு வாரா நின்றவிடத்து மூன்றாம் நரகம் மூன்று யோசனை யாழமுமகலமுமுடையது; அதற்குப்பெயர் புகையெழு நரகம். இதுக்குள்ளே எத்தனை ஆயிரம்பேர் அலறுவாரும் விழுவாருமாயிருப்பாரைக்கண்டு இவர்கள் என்ன பாவஞ் செய்தார்களோ வென்று நாசி கேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

இவர்கள் நல்லோரை அநியாயம் சொன்னாரும், நம்பி னரைக் கெடுத்தாரும், கடமைதான்னேறக் கொன்றாரும், கற்புடைய மங்கையரை யழித்தாரும், ஏழைக் குடியையழித் தாரும், ராசவலியாலடித்தாரும், மாட்டைத் திண்டாடத் தானிழுத்து தீனியிடாமல் கட்டிவைத்தாரும், எருது எடுத் திறைரும், மேல்பாரம் வைத்தாரும், இருள்தனில் இல்லறஞ் சுட்டாரும் இவர்கள் காணும் இந்த வாதைப்படுகிறவர்க ளென்று சொல்லக்கேட்டு வாரா நின்றவிடத்து நாலாம் நரகம் நானூறு யோசனையாழமும் அகலமுமுடையது. இதற்குப் பெயர் மகா நரகம் என்றும் பெயர். அது யானை அட்டையும் குதிரை அட்டையும் உடையது. அவற்றால் கடிப்புண்டு அலறிவிழுவாரைக்கண்டு இவர்களென்ன பாவஞ்செய்தார்களோவென்று நாசிகேது கேட்கக் கிங்கிலி யன் சொல்லுவான்.

இவர்கள் வச்சாருடமையை எடுத்துக்கொண்டு வயி றெரியப் பார்த்தாரும் ரிஷபத்தை உழுதாரும் ரிஷபத்தின் மேலே பொதியை ஏற்றினரும், பசுக்களையுழுதாரும், பசுக்

கள் மேல் பொதி ஏற்றினரும், ஈயாது உண்டாரும், தண்ணீர் பந்தல் அழித்தாரும் சாலக்ரகத்தையுடைத்தாரும், செய்தார் செய் தன்மத்தையழித்தாரும், இவர்கள் காணுமிந்த வாதைப்படுகிறவர்களென்று சொல்லக்கேட்டு வாரா நின்றவிடத்து அஞ்சாவது நரகம் ஐநூறு யோசனை ஆழமும் அகலமுமுடையது. இது நீர் நாயும் கழுதையுண்ணிகளுமுடையது. இதனால் கடிப்புண்டு எத்தனை ஆயிரம்பேர் அங்கலாய்க்கிறவர்களைக் கண்டு இவர்களென்ன பாவஞ் செய்தார்களோவென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

இவர்கள் தன் மாதா பிதாவைச் சொல்லாத வார்த்தை சொன்னரும், அடைக்கலம் புக்காரைக் காட்டிக் கொடுத்தாரும், ஒளிச் சிருந்தாரைக் காட்டிக் கொடுத்தாரும், இரணகளத்திலே கும்பிட்டவர்களை வெட்டினரும், ஓடிப்போனவர்களை வெட்டினரும், ஆயுதம் கையில் இல்லாதவனை வெட்டினரும், களவு செய்தே திரிவாரும் இரவல் வாங்கி மீளக் கொடாதாரும், கொடுத்த கடன் கேட்கக் கொன்று பழி சூழ்ந்தாரும் வாங்கின கடன் கொடாதாரும், வஞ்சகமே செய்தாரும், கூலியாள் கூலியை இழுக்கடிச்சாரும், கொடுப்பாரருகிருந்து குற்றங்களைச் சொன்னரும், இவர்கள் காணும் இந்த வாதைப்படுகிறவர்கள் என்று சொல்லக்கேட்டு வாராநின்ற விடத்து ஆறும் நகரம் அறுநூறு யோசனை ஆழமும் அகலமுமுடையது. வாலாப் புழுக்களும், யானைப் புழுக்களும், குதிரைப் புழுக்களும், புழுக்களே கூறுகொண்டு கொதிக்கும் இதற்குப் புழுவாய் நரகமென்றும் பெயர். இதிலே எத்தனை ஆயிரம்பேர் முழுகி, கடிப்புண்டு அங்காலாய்க்கிறவர்களைப் பார்த்து இவர்கள் என்ன பாவஞ் செய்தார்களோ வென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

தன் பக்கலிருந்துண்பாரை விட்டுத் தான் வேறேயுண்டாரும் அசனம்[1] பண்ணுகிற பந்தியில் வஞ்சித்தே யிட்டா

1 அசனம்—உணவு.

ரும்வழக்கில்லா வழக்கை யுரைத்தாரும் நல்லோர்கள் பெரியோர்கள் தபோதனர்கள் பதிவிரதைகள் மனது கன்றச் செய்தாரும் மாதா பிதாக்கள் மனது கன்ற நடந் தாரும், விசுவாச பாதகங்கள் பண்ணினூரும், பஞ்சமா பாதகங்கள் பண்ணினூரும், இவர்கள் காணும் இந்த வாதைப்படுகிறவர்கள் என்று சொல்லக்கேட்டு வாரா நின்றவிடத்து ஏழாம் நரகம் எழுநூறு யோசனை யாழமு மகலமுமுடையது. எரிவாய் நரகம் என்று பெயர். எந் நேரமுந் தீயாய் எரியப்பட்டது. எண்ணவொண்ணுத பேர் கிடந்து எரியவும் முழலையுமாய் பொறுக்கமாட்டாமல் கரையிலேறி வருவாரை மேலே நின்று கிங்கிலியர் இருப்புலக்கை கொண்டு அடித்து நுக்குவாரைக் கண்டு இவர்கள் என்ன பாவஞ் செய்தார்களோ வென்று நாசி கேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

இவர்கள் சிவபூசை குலைத்தாரும், தெய்வதானங்களைப் பறித்தாரும், எமலோகத்திலே எம்பாதைகளெல்லாம் கண்டேன். பூலோகத்திலே ஊமையும் அல்லியனுங் குருடு முடமுங் கால் கை குறைந்தவர்களும் ஆருதநோயும் பிணியுமாய் அலறுவாருந் தரித்திரியமாகத் திரிவாரும், ஒருவனை ஒருவன் சுமந்து நிழலிட்டு திரிவாரும், ஒருவருக் கொருவர் ஆளும் அடிமையுமாகத் திரிவாரும் இப்படி வருகின்ற காரணமேதென்று நாசிகேது வினவ கிங்கிலியன் சொல்லுவான்.

இடுவந்தி[1] இட்டாரும், காணுது கேளாது சொன்ன ரும் குரு சன்னதியிலுந் தந்தை தாய் தவசிகளுடன் பெரி யோர்களுடன் பதிவிரதைகளுடன் தகாது சொன்னூரும்[2], அகரங்களையழித்தாரும் ப......ளைத்தறித்தாரும் காட்டில் வாழும் மிருகங்களைக் கூட்டில் வைத்தாரும், வழி நிழல் வெட்டினூரும், மன்றில் நிழல் தோப்புகளை அதம் பண்ணித் தவத்தைக் குலைத்தாரும், பசுக்களையுதைத்தாரும், பிச்சை

1 இடுவந்தி—குற்றமில்லாதவர் மேற்குற்றத்தை யேற்றுகை

2 அகரம்—அக்கிரகாரம்; ஊர்

யிட்டுண்ணுதாரும், மூத்தாரிருக்க முன்னே இருந்து எத்தாப்புப் போட்டிருக்கும் மேழையும், என்று வாரா நின்றவிடத்து கிங்கிலியன் சொல்லுவான்.

பாவிகாள்! நீங்கள் இந்த வாதைகளிலே அகப்படாது சுகமே இருக்க வேண்டிஞல் திருக்கோயில் கட்டுமிடங்கள் திருமடப்பள்ளி க்கட்டுமிடங்கள், திருவிளக்கிடுமிடங்கள் திருப்படத்தாகமமெடுமின்கள், சிவபூசை பண்ணுமின்கள் அன்னதானம் பகிருமின்கள், பூமிதானங்கொடுமின்கள் கன்னியாதானங்கள் செய்யுமின்கள், பூமிதானங்கள் கொடுமின்கள், சொர்ணதானங்கள் கொடுமின்கள், அசுவைத்தானம் பண்ணுமின்கள் இப்படிப்பட்ட புண்ணியங்கள் செய்தால் இந்த வாதைப்படாமல் பூலோகத்திலே பிறந்தாலும் நோவு பிணியில்லாமல் பவுஷ்ய பாக்கியங்கள் உண்டாகித் தன் கை மேலாக ஒருவருக்குக் கொடுக்கும் புண்ணியவான்களாய் இருப்பார்கள். மனது ஒருமித்துப் பக்தியுடனே அதிக புண்ணியங்களைச் செய்தால் சொர்க்கமே பெறுவார்கள். மனது ஒருமித்துச் சிவபூசை பண்ணிஞல் சில பணிவிடைகளைச் செய்தால் ஞானிகள் பெரியோர்கள், மகேசுரருக்குப் பணிவிடை செய்தால் என்று சொல்லக்கேட்டு வாரா நின்ற விடத்து மற்றுஞ் சிலரைக் கின்னரர் கிம்புருஷர் சித்த வித்தியாதரர் கொண்டாட இருப்பாரைக்கண்டு இவர்கள் என்ன புண்ணியஞ் செய்தார்களோவென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

மாதா பிதாக்களையும் வித்தை கொடுத்த வாத்தியாரையும் குருக்களையும் தெய்வமாகக் கொண்டிருந்தாரென்று சொல்லக்கேட்டு வாரா நின்ற விடத்து மற்றுஞ்சிலரை சாந்துஞ் சந்தனமும் கஸ்தூரி கற்பூரங்களிஞல் அலங்கரித்துப் போக போக்கியமாக இருப்பாரைக்கண்டு இவர்கள் என்ன தன்மங்கள் செய்தார்களோ வென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

திருக்கோயிலுக்குத் திருமஞ்சன மெடுத்தாரும், திருவமுது வைத்தாரும், அஷ்டமியுந் துவாதசியும் சிவராத்திரியும் திருமேனிப்பூசத் தம் திருவாபரணம் உண்டாக்கினர். கெந்த புஷ்ப தீப தூப முண்டாக்கினர், என்று சொல்லக் கேட்டு வாரா நின்றவிடத்து மற்றுஞ்சிலரை மண்டபத்து வைத்துக் கீத வாத்தியங்களினாலே சேர்வை பண்ணக் கண்டு இவர்கள் எண்ண புண்ணியஞ் செய்தார்களோ வென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

இவர்கள் திருக்கோவிலுக்குச் சங்கு பேரிகை கீத வாத்தியங்கள் இடுவித்தாரென்று சொல்லக்கேட்டு வாரா நின்ற விடத்து மற்றுஞ் சிலரை முத்தின் பந்தல் சமைத்து லாம்பிச்சை வேராலே ஒத்தாப்புக்கட்டி[1] பன்னீர் கலந்த சந்தனத்தாலும் பூமாலைகளாலும் அலங்கரித்து அதன்கீழ் இருப்பாரைக்கண்டு இவர்கள் என்ன தன்மஞ் செய்தார்களோவென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

தன் பத்தாவை தெய்வமாகக் கொண்டிருந்தாருந் தன் பத்தாவின் சொற் கடவாதாரும் சிங்காதனத்தின் மீதிருந்து கவரிவீச இருப்பாரைக்கண்டு இவர்கள் என்ன புண்ணியஞ் செய்தார்களோவென்று நாசிகேது கேட்கக் கிங்கிலியன் சொல்லுவான்.

இவர்கள் திருக்கோயில்களுக்குந் தேவர்களுக்குந் திருப் பூ கட்டினாருமென்று சொல்லக்கேட்டு வாராநின்ற விடத்து கிங்கிலியன் சொல்வான்.

நாசிகேது! நீ இப்பொழுது தன்மமும் பாவமுமிரண்டையும் அனுபவித்தவர்களைக்கண்டு நீ அங்குபோய் சொன்னால் அங்குள்ளார் தன்மமே செய்தால் சொர்கமே வந்து

---

1 ஒத்தாப்பு—குடில்

பெறுவார்கள். ஆதலால் இவ்விடத்து நரகம் பாழாம். இவ்விடத்துக்கு ஒன்றுமில்லை. உன்னுடைய பிதாவாகிய திவ்வீயாங்கன் நன்மையாலே நீயும் இவ்விடத்துக்கு வந்து தன்ம பாவங்களைப் பார்த்துக்கொண்டு போகின்றாய். அங்குள்ளார் தன்மமே செய்தால் சொர்கமே பெறுவார்களென்றவாறு. நாசிகேது புராணம் எழுதி நிறைந்தது முற்றும்.

THE THANJAVUR MAHARAJA SERFOJI'S SARASWATHI MAHAL LIBRARY
THANJAVUR

குருபாதந் துணை.

வெற்றி வேலுற்ற துணை.